# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## மருத்துவ ஆதாரத்தோடு தெய்வீக சுகமளிக்கும் சாட்சிகள் நிரூபிக்கப்பட்டதை பார்ப்பது அற்புதமான ஒன்று!

### 17 நாடுகளிலிருந்து வந்த 400 பேரோடு போலந்தில் நடந்த WCDN-ன் 15வது சர்வதேச கருத்தரங்கு














2018 ஜூன் 16 முதல் 17 வரை "தெய்வீகம், மருத்துவம் மற்றும் அறிவியல்" என்ற தலைப்பில் சர்வதேச கிறிஸ்தவ மருத்துவர் குழுமம் அதன் 15வது சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ கருத்தரங்கை வார்சாவில் உள்ள போலாந்தில் நடத்தியது. WCDN என்பது மருத்துவ ஆதாரங்களோடு தெய்வீக சுகம்பெற்ற சாட்சிகளை நிரூபிக்கும் மருத்துவர்கள் அடங்கிய ஒரு சர்வதேச கூட்டமைப்பாகும். அது உலகமெங்கிலும் ஆண்டுதோறும் கருத்தரங்குகளை நடத்துகிறது.

இந்த 15வது கருத்தரங்கில் இஸ்ரேல், ரஷ்யா, ஸ்பெயின், இத்தாலி மற்றும் பல்கேரியா உள்பட 17 நாடுகளிலிருந்து வந்திருந்த ஏறக்குறைய 400 மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் பங்குபெற்றனர். இது ஆங்கிலம், போலிஷ், ரஷ்யம், ஸ்பானியம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இரண்டு நாட்களுக்கு 12 சுகமான சாட்சிகளும், நான்கு சிறப்பு விரிவுரைகளும் வழங்கப்பட்டன.

ஒரு சிறிய துதி ஆராதனை மற்றும் ஒவ்வொரு நாட்டிலிருந்து வந்திருந்தவர்களின் அறிமுகம் நடைபெற்ற பிறகு, கூட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் Dr. டாரியா வொஜ்னர், வரவேற்பு செய்தியை அளித்தாள். முதல் பகுதியில் WCDN இஸ்ரேலின் இயக்குனர், Dr. அன்ரே கஷிவ்ரோஸ்கி விசேஷித்த விரிவுரையாற்றினார். அவர் WCDN–னின் நிறுவனர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஊழியம், அவரை கொரியாவில் சந்தித்தது மற்றும் அறிவர். லீ யோடு நடைபெற்ற கூட்டம் போன்றவற்றை பற்றி பேசினார்.

அவர் சொன்னதாவது, "இந்த கருத்தரங்கிற்கு ஆயத்தப்படும்படி நான் அநேக கிறிஸ்தவ மருத்துவர்களையும், மருத்துவ நிபுணர்களையும் சந்தித்தேன். அவர்கள் அசாதாரணமான தேவனுடைய கிரியைகள் மிகவும் முக்கியமானது என்றனர். அறிவர். ஜேராக் லீ அவர்கள்மூலம் நடைபெற்ற தெய்வீக சுகமாகுதலின் கிரியைகள் மற்றும் தேவனுக்காக, ஆண்டவருக்காக ஆத்துமாக்களுக்காக அவர் செய்து வருகிற அர்ப்பணிப்புகளை பங்குப்பெறுகிறவர்கள் கேட்கும்போது தொடுதலைப் பெறுவார்கள் என்று நான் நினைத்தேன். எனவே நான் நேரடியாக பார்த்து, அனுபவித்த அவருடைய வாழ்க்கை, ஊழியம், தாழ்மை, அன்பை குறித்து பேசவேண்டும் என முடிவெடுத்தேன். இதனால் தான் உங்களுக்கு இந்த காரியங்களைப் பற்றி பேசுகிறேன்."

WCDN–னின் தலைவர் Dr. கில்பர்ட் சே வாழ்த்துரையாற்றினார்; அறிவர். ஜேராக் லீ அவர்களின் வல்லமையான ஊழியத்தை குறித்த காணொளி காட்சிகள் காண்பிக்கப்பட்டது. அதன்பிறகு சுகமான சாட்சிகளை வழங்கினார்கள். இந்த வருடம், அறிவர். லீ அவர்களின் ஜெபத்தினால் சுகம்பெற்ற ஏழு நிகழ்வுகளை குறித்து கலந்துரையாடினர்.

Dr. லியுப்கா தன்ஷிவா, பல்கேரியா, மூளை இரத்தக்கசிவிலிருந்து சுகமடைந்த சாட்சியை விளக்கினார்; Dr. ஒலிசியாதனாஸ், மல்டோவா, கணுக்கால் எலும்பு முறிவு; Dr. டானியேல் பியுன்டிஸ் அக்கோஸ்டா, மெக்ஸிகோ, பித்தப்பை நோய்; Dr. வாகி புனியாடியன், அர்மேனியா, கார்டியாக் பற்றாக்குறை; Dr. ஜோன்சங் கிம், கொரியா, பார்வைத்திறன் புதுப்பித்தல் பற்றி பேசினார்கள். Dr. சங்க்யு யாங், கொரியா, அசுத்த ஆவியின் பிடியிலிருந்து சுகமடைந்தவர்களின் சாட்சிகளை விளக்கி, ஆவிக்குரிய உலகத்தின் ஆழத்தைப் பற்றி பேசினார். அவரின் விரிவுரை, ஆவிக்குரிய பிரச்சனையை முதலாவது தீர்ப்பதின்மூலமாக மனநிலை பாதிப்பு மற்றும் சரீர குறைபாடு போன்றவற்றிற்கு முற்றும் தீர்வுகாணமுடியும் என பங்குப்பெற்றவர்கள் நம்பினார்கள்.

Dr. டேவிட் யு, சிங்கப்பூர், பங்குப்பெற்றவர்களின் மனதை கொள்ளை கொண்ட மூவான் மதுர தண்ணீரினால் நடைபெறுகிற சுகங்களை குறித்துப் பேசினார். யாத்திராகமம் 15:25ல் உள்ளபடி மாராவில் கசப்பான தண்ணீர் குடிக்கக்கூடிய சுவையான தண்ணீராக மாறியதைப் போல, மூவான் மான்மின் சபைக்கு எதிராக உள்ள கடல் தண்ணீரானது அறிவர். லீ அவர்களின் ஜெபத்தின்மூலமாக குடிக்கக்கூடிய சுவையான தண்ணீராக மாறியது. இந்த மூவான் மதுர தண்ணீரை பயன்படுத்திய அநேக மக்கள் தங்களது வியாதிகளிலிருந்து சுகமடைந்துள்ளார்கள்; மரித்த நிலையில் இருந்த மிருகங்களும் தாவரங்களும்கூட உயிர்பெற்றுள்ளன.

இதற்கிடையில், போலாந்து மருத்துவர்கள் அடிவயிற்று சவ்வு அழற்சி, மார்பக புற்றுநோய், மூளை இரத்தக்கசிவு, பிட்யூட்டரி சுரப்பி கட்டி, கருவின் அசாதாரண நிலை போன்ற ஜெபத்தால் நடந்த ஐந்து சுகமான சாட்சிகளை குறித்து பேசினார்கள். இரண்டாவது சிறப்பு கூட்டத்தில் அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கத்தின் அடிப்படையில், "ஜீவவித்து" என்ற காணொளி காண்பிக்கப்பட்டது. மூன்றாவது சிறப்பு கூட்டத்தில் "வியாதிகளுக்கான மூலவேர்" பற்றி Dr. கில்பர்ட் சே விரிவுரை வழங்கினார்.

உக்ரைனை சார்ந்த Dr. டிமிட்ரோ க்ருபின் சொன்னதாவது, "தெய்வீகத்தோடு மருத்துவத்தை இணைத்தது ஆர்வமானதாக இருந்தது. ஆவிக்குரிய வழிகளின் மூலமாக வியாதிகளிலிருந்து சுகமடைய முடியும் என்பதை இப்பொழுது நான் உணருகிறேன்." WCDN மத்திய கிழக்கு நாடுகளின் ஒருங்கிணைப்பாளர் போதகர் டேனியேல் ரோசன், "இஸ்ரேலின் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்" என்ற கருப்பொருளின்கீழ் விரிவுரையாற்றினார்.

போலாந்து கருத்தரங்கின் ஆயத்தகுழு தலைவர் Dr. டாரியா வொஜ்னர் சொன்னதாவது, "ஜெபத்தின் மூலமாக தேவனுடைய சுகமளிக்கும் கிரியைகள் நடைபெறுவதை குறித்து கேட்பது பரவசமானது. பல வகையான சுகமளிக்கும் சாட்சிகள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கான விசேஷித்த விரிவுரைகள் மற்றும் அற்புதமான கலைநிகழ்ச்சிகளும் மிக நன்றாக இருந்தது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை எங்களுக்கு தந்து, எங்களுக்காக ஜெபித்த அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு நான் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்."

மான்மின் தலைமை சபையின் கலைநிகழ்ச்சி குழுவிலிருந்து வந்திருந்த கலைக்குழுவினர்கள் உள்நாட்டு மொழி உள்பட ஆறு மொழிகளில் துதித்தனர்; போலாந்து பாரம்பரிய நடனம் உள்பட ஆச்சரியமான நடன நிகழ்ச்சிகளையும் காண்பித்தனர்.

# சுகமாக்குகிற தேவன்!



**அறிவர். ஜேராக் லீ,**
**தலைமை போதகர், மான்மின் மத்திய திருச்சபை**

- தலைமை போதகர், இயேசு கிறிஸ்துவின் ஒருங்கிணைந்த பரிசுத்த திருச்சபைகள்
- நிரந்தர தலைவர், உலக கிறிஸ்தவ எழுப்புதல் ஐக்கிய ஸ்தாபனம்
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ அலைவரிசைகள் குழுமம் (GCN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், உலக கிறிஸ்தவ மருத்துவர்கள் குழுமம் (WCDN)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், மான்மின் சர்வதேச வேதாகம கல்லூரி (MIS)
- ஸ்தாபகர் & அவைத்தலைவர், சர்வதேச பரிசுத்த இறையியல் கல்லூரி
- ஊழியத்தின் முனைவர், தெய்வீகத்தின் (Divinity) கௌரவ டாக்டர் பட்டங்களை உலக நாடுகளின் பிரசித்திப்பெற்ற இறையியல் கல்லூரிகளில் பெற்றவர்.
- அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் உலகமெங்கிலும் 220 நாடுகளில் பல கிறிஸ்தவ மற்றும் பொது ஊடகங்கள் வழியாக 24 மணி நேரமும் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.
- அறிவர். லீ அவர்கள் பெரு, காங்கோ மற்றும் பல ஆப்பிரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் அநேக அரசியல் தலைவர்களுக்கு கௌரவ தெய்வீக ஆலோசகராய் செயல்பட்டு வருகிறார்.

*அவரது கிறிஸ்தவ செய்திகள், ஜூங்ஆங் தினத்தந்தி, தடோங்–அ இல்போ, த சியோல் ஷின்முன், த ஹான்கியோரே ஷின்முன், த கொரியா எக்கனாமின் தினதந்தி, த ஷீஷா செய்திகள் மற்றும் கிறிஸ்தவ பத்திரிக்கையில் வெளியாகிறது.*

அவர் அமெரிக்கா; ஜப்பான்; இந்தியா; பாகிஸ்தான்; பிலிப்பைன்ஸ்; அர்ஜென்டினா; ஹோண்டுராஸ், பெரு; ரஷ்யா; ஜெர்மனி; கென்யா; டான்சானியா; உகாண்டா; குடியரசு காங்கோ; இஸ்ரேல்; எஸ்டோனியா மற்றும் உலகத்தின் பல நாடுகளில் படைமுயற்சி கூட்டங்களை நடத்தியுள்ளார்.

தேவன் நேற்றும் இன்றும் மாறாதவராயிருக்கிறார். இன்றும் என்றும் அவர் தம் அன்பான பிள்ளைகள் நோய்களோடு சம்பந்தமில்லாமல் ஆரோக்கியமான வாழ்வு நடத்தடவேண்டும் என்று விரும்புகிறார். காரணமில்லாமல் பாதிப்பு இல்லை என்பது போல, ஒவ்வொரு வியாதியும் அதன் காரணத்தையுடையதாயிருக்கிறது. ஆக, நீங்கள் நோய்களின் காரணத்தைப் புரிந்துகொள்ளும்போது, சுகத்தைப் பெறுவது கடின–மாயிருக்காது. இப்போது நோய்களின் காரணத்தையும் நம்முடைய பரிகாரியாகிய தேவனை சந்திக்கும் வழியை நாம் பார்ப்போம்.

### 1. ஆயத்தப்படி : தேவன் விரும்புகிற விசுவாசம்

நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் ஊழியத்தை பதிவு செய்துள்ளது. அவர் மூலமாக, குருடர்கள் பார்வையடைந்தனர், செவிடர் கேட்டனர், முடவர் நடந்து குதித்தனர். மேலும் குஷ்டரோகிகள் சொஸ்தமாயினர். எல்லா வகையான வியாதிகளும் சுகமாயின, மரித்தோரும்கூட உயிர்பெற்று எழுந்தனர்.

இயேசுவானவர் மிகப் பெரிய வல்லமையுடையவராயிருந்தாலும்கூட, எல்லா மக்களுமே சுகமாகிவிடவில்லை. அதன் விளைவு அவர்களுக்கு தேவனருளிய விசுவாசம் இருந்ததா அல்லது இல்லையா என்பதன் அடிப்படையை சார்ந்து இருந்தது. அப்பேர்பட்ட விசுவாசத்துடன் அவர்கள் அவர் முன்பாக வந்தபோது, அவர்கள் எப்பேர்பட்ட பிரச்சனைகளுக்கும் பதிலைப் பெற்றுக்கொண்டனர் (மத்தேயு 9:18–26; மாற்கு 10:46–52). அவர்களால் தாமே அவர் முன்பாக வரமுடியவில்லை என்றாலும், அவர்கள் சார்பாக அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள் வந்து, விசுவாசத்துடன் கேட்டு, பதிலைப் பெற்றுக்கொண்டனர்.

மாற்கு 2ம் அதிகாரம், திமிர்வாதக்காரனையும் அவன் நண்பர்களைப் பற்றியும் எழுதியுள்ளது. அவர்கள் கூட்டத்தினிமித்தம் இயேசுவண்டை வர இயலவில்லை. ஆகவே, அவர்கள் அவர் இருந்த வீட்டின் மேற்கூரையை பிரித்து, அந்த திமிர்வாதக்காரன் படுத்திருந்த படுக்கையை அவர் முன்பு இறக்கினார்கள். அவர்கள் அவன் இயேசுவண்டை கொண்டு செல்லப்பட்டால் சுகமாவான் என்று விசுவாசித்தபடியினாலே அப்படி செய்தார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை சுகமாக்கினார். அவன் எழுந்து நடந்தான். இந்நிகழ்வில் விளக்கப்பட்டுள்ளபடி, நாம் தேவனிடத்திலிருந்து பதிலைப் பெறுவதற்கு நம்முடைய பாத்திரத்தை நாம் ஆயத்–தப்படுத்த வேண்டும், அந்தப் பாத்திரம் தான் “விசுவாசம்.”

மருத்துவ கண்ணோட்டத்தில் சுகமாக்கப்பட முடியாத மரணத்திற்கேதுவான வியாதியாயிருந்தாலும்கூட தேவனுடைய வல்லமையால் அவைகள் சுகமாக்கப்பட முடியும். அந்த வல்லமை சக்கர நாற்காலிகளில் இருப்பவர்களை எழுந்து நடக்கவும், குருடர்களைப் பார்க்கவும், ஊமையர்களைப் பேசவும் செய்யும். உயிருக்கு ஆபத்தான நிலையில் வாழ்வா சாவா என்பதன் இடையில் இருப்பவர்கள்கூட ஜெபத்தின்மூலமாக சீர்நிலையை அடைய முடியும். எப்படியிருந்தாலும், சுகத்தைப் பெறுவதற்கு, நாம் நோய்களின் காரணத்தை முதலாவது புரிந்துகொள்ள வேண்டும்.

### 2. நோய்களின் காரணங்கள்

#### 1) பாவம்

நான்கு சுவிசேஷங்களும் இயேசுவின் ஊழியத்தை பதிவு செய்துள்ளது. அவர் மூலமாக, குருடர்கள் பார்வையடைந்தனர், செவிடர் கேட்டனர், முடவர் நடந்து குதித்தனர். மேலும் குஷ்டரோகிகள் சொஸ்தமாயினர். எல்லா வகையான வியாதிகளும் சுகமாயின, மரித்தோரும்கூட உயிர்பெற்று எழுந்தனர்.

இயேசுவானவர் மிகப் பெரிய வல்லமையுடையவராயிருந்தாலும்கூட, எல்லா மக்களுமே சுகமாகிவிடவில்லை. அதன் விளைவு அவர்களுக்கு தேவனருளிய விசுவாசம் இருந்ததா அல்லது இல்லையா என்பதன் அடிப்படையை சார்ந்து இருந்தது. அப்பேர்பட்ட விசுவாசத்துடன் அவர்கள் அவர் முன்பாக வந்தபோது, அவர்கள் எப்பேர்பட்ட பிரச்சனைகளுக்கும் பதிலைப் பெற்றுக்கொண்டனர் (மத்தேயு 9:18–26; மாற்கு 10:46–52). அவர்களால் தாமே அவர் முன்பாக வரமுடியவில்லை என்றாலும், அவர்கள் சார்பாக அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள் வந்து, விசுவாசத்துடன் கேட்டு, பதிலைப் பெற்றுக்கொண்டனர்.

மாற்கு 2ம் அதிகாரம், திமிர்வாதக்காரனையும் அவன் நண்பர்களைப் பற்றியும் எழுதியுள்ளது. அவர்கள் கூட்டத்தினிமித்தம் இயேசுவண்டை வர இயலவில்லை. ஆகவே, அவர்கள் அவர் இருந்த வீட்டின் மேற்கூரையை பிரித்து, அந்த திமிர்வாதக்காரன் படுத்திருந்த படுக்கையை அவர் முன்பு இறக்கினார்கள். அவர்கள் அவன் இயேசுவண்டை கொண்டு செல்லப்பட்டால் சுகமாவான் என்று விசுவாசித்தபடியினாலே அப்படி செய்தார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்காரனை சுகமாக்கினார். அவன் எழுந்து நடந்தான். இந்நிகழ்வில் விளக்கப்பட்டுள்ளபடி, நாம் தேவனிடத்திலிருந்து பதிலைப் பெறுவதற்கு நம்முடைய பாத்திரத்தை நாம் ஆயத்–தப்படுத்த வேண்டும், அந்தப் பாத்திரம் தான் “விசுவாசம்.”

மருத்துவ கண்ணோட்டத்தில் சுகமாக்கப்பட முடியாத மரணத்திற்கேதுவான வியாதியாயிருந்தாலும்கூட தேவனுடைய வல்லமையால் அவைகள் சுகமாக்கப்பட முடியும். அந்த வல்லமை சக்கர நாற்காலிகளில் இருப்பவர்களை எழுந்து நடக்கவும், குருடர்களைப் பார்க்கவும், ஊமையர்களைப் பேசவும் செய்யும். உயிருக்கு ஆபத்தான நிலையில் வாழ்வா சாவா என்பதன் இடையில் இருப்பவர்கள்கூட ஜெபத்தின்மூலமாக சீர்நிலையை அடைய முடியும். எப்படியிருந்தாலும், சுகத்தைப் பெறுவதற்கு, நாம் நோய்களின் காரணத்தை முதலாவது புரிந்துகொள்ள வேண்டும்.

#### 2) இயற்கை உலக நியமத்தை மீறுதல்

உங்கள் சரீரத்தைச் சேதப்படுத்தக்கூடிய ஏதாகிலும் ஒன்றை தொடர்ந்து செய்வீர்களானால், உங்களுக்கு வியாதி வந்துவிடும். உதாரணமாக, நீங்கள் உங்கள் இயற்கை வரம்பை மீறி உங்களை முழுவதும் பயன்படுத்தினால், உங்களை அதிகமாய் கஷ்டப்படுத்தி கொள்வீர்கள். உங்களுக்கு ஒழுங்கற்ற உணவு பழக்கவழக்கங்கள் அல்லது அதிகமாக உண்ணும் வழக்கங்கள் இருக்கலாம். அல்லது நீங்கள் சமவிகித உணவு பழக்கத்தில் இல்லாமல் இருக்கலாம். ஒருவேளை நீங்கள் புகைப்பிடித்து அல்லது மதுபானம் அருந்தலாம். அவைகள் உங்கள் ஆரோக்கியத்திற்கு கேடு என்பதை நீங்கள் அறிந்திருந்தாலும்கூட, நீங்கள் உங்கள் ஆசைகளை கட்டுப்படுத்தமுடியாமல் இருக்கலாம். அல்லது பேராசையினிமித்தம் உங்கள் சரீரத்தைப் பராமரிக்காமல் விட்டு விட்டிருக்கலாம். அப்போது, நீங்கள் வியாதிப்படுவீர்கள். இவைகள் அனைத்தும் தேவன் ஏற்படுத்திய இயற்கை உலகத்தின் ஒழுங்குகளை மீறுவதாகும். மேலும் நீங்கள் இவ்வுலகத்தின் நியமங்–களையும் விதிகளையும் மீறும்போது, உங்களால் தேவனுடைய பாதுகாப்பை பெற இயலாது.

நீங்கள் தேவன் உங்களுக்குத் தந்த சரீரத்தை நேசித்து பாதுகாத்து அதைப் பரிசுத்தமாய் வைக்க வேண்டும். ஆகவே, தேவனுடைய பார்வையில் நீங்கள் சரியாய் நடக்கவில்லை என்பதை அறிக்கைச் செய்து மனந்திரும்ப வேண்டும்.

#### 3) நரம்பியல் மற்றும் மனநோய்கள்

நீங்கள் கவலைகள் அல்லது வியாகுலங்களால் மன அழுத்தத்திற்குள்ளாகியிருந்தால் அல்லது நீங்கள் பயங்கரமான கோபம், பகைமை மற்றும் துக்கத்தை இருதயத்தில் வைத்து வைத்திருப்பீர்களானால், அது உங்களுக்கு நரம்பியல் மற்றும் மனநோய்களை கொண்டு வந்துவிடும். நரம்பு மண்டல கோளாறு, மனநோய், மனச்சோர்வு போன்ற மனநலக் கோளாறுகள் போன்ற கோபத்தால் ஏற்பட்ட அப்பேர்பட்ட நோய்கள் எல்லாம் உதாரணங்கள். இப்பேர்பட்ட மனநல நோய்கள் அடிக்கடி மற்ற சரீர நோய்களுக்கு வழிநடத்திவிடும். சில மக்கள் அவர்கள் மனரீதியாக பெலவீனமாயிருக்கும்போது இதயத்தையும் மனதையும் விட்டுக்கொடுத்துவிடும் போது இருளின் கிரியைகளினாலே பீடிக்கப்பட்டு விடுகிறார்கள்.

பிலிப்பியர் 4:6ல் வாசிக்கிறோம், “நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்–துங்கள்.” 1 தெசலோனிக்கேயர் 5:16–18 கூறுகிறது, “எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்; எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்.” எபிரெயர் 12:14 சொல்கிறது, “யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.” நீங்கள் வேத வசனத்தின்படி வாழும்போது உங்களுக்கு அப்பேர்பட்ட மனநல வியாதிகள் இருக்காது.

உங்களுக்குள்ளாக, வெறுப்பு, கோபம் மற்றும் கசப்புணர்வு இருக்கும்போது, உங்களால் பிறரை மன்னிக்க இயலாது. நீங்கள் அவர்களை பழிப்பீர்கள் அல்லது வெறுப்பீர்கள். நீங்கள் நன்றியுள்ளவர்களாய் உணர்ந்து களிகூராதபோது, நீங்கள் குறைசொல்லி முறுமுறுத்து கவலைப்படும்போது, இதன் காரணம் தேவன்பேரில் நம்பிக்கை குறை உள்ள ஒரு வழக்கமான செயலாகிவிடும். இது தேவனுடைய பார்வையில் சரியானது அல்ல, ஆகவே நீங்கள் இதை அறிக்கைச் செய்து மனந்திரும்ப வேண்டும்.

#### 4) எதிராளியான பிசாசும் சாத்தானும்

மக்கள் பேயினால் அல்லது சாத்தானால் பீடிக்கப்பட்டிருக்கும்போது, அவர்கள் பேய்களினால் அல்லது பிசாசினால் சில வியாதிகளிலிருந்து

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)...” (அப். 17:25)
“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12)

**"நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."**
**(யாத்திராகமம் 15:26)**

கஷ்டப்படுவார்கள். இது வழக்கமாக பயங்கரமான விக்கிரக வழிபாடு செய்கிற குடும்ப அங்கத்தினர்கள் உள்ள குடும்பங்களிலே நடைபெறுகிறது. இப்பேர்பட்ட குடும்பங்களிலிருந்து சோதனைகளும் போராட்டங்களும் போவதில்லை. வியாதிகள் சரீர மற்றும் மனநல கோளாலுகள், குடி அடிமைத்தனம், மனச்சோர்வு மற்றும் தற்கொலை களும்கூட இப்பேர்பட்ட குடும்பங்களில் நடப்பது நிறுத்தப்படுவதில்லை (யாத்திராகமம் 20:4–5).

நீங்கள் அப்பேர்பட்ட குடும்பத்தில் அங்கத்தினராய் இருந்தாலும்கூட, நீங்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்தால், நீங்கள் தேவனுடைய பாதுகாப்பின்கீழ் இருக்கலாம். ஆனால் உங்களில் சிலர் நீங்கள் அறியாமலேயே விக்கிரகங்களோடு ஒரு கயிற்றோடு இணைக்கப்பட்டிருக்கலாம். அதாவது, உங்களது பெயர்கள் விக்கிரங்களிலோ அல்லது விக்கிரக சம்பந்தமான பொருட்களிலோ உங்களது பெற்றோர்கள் அல்லது மூதாதையர்களால் பொறிக்கப் பட்டிருக்கலாம். அப்படியானால் நீங்கள் அதை அகற்ற வேண்டும். இப்பேர்பட்ட கயிற்றை நீங்கள் அறுத்தால் தான் வியாதியிலிருந்து விடுதலை பெற முடியும்.

கூடவே, ஒருவரது மூதாதையர்கள் அல்லது தற்போதுள்ள குடும்ப அங்கத்தினர்கள் பயங்கரமான மிகவும் பொல்லாத செயல்களை செய்திருந்தால் அவனோ அவளோ சாத்தானால் அல்லது பேய்களால் பீடிக்கப்பட்டிருக்க முடியும். ஒருவன் அசுத்த ஆவிகளின் கிரியைகளின் கீழிருந்தால், அவனோ அவளோ விசுவாசி என்று கூறிகொண்டாலும், வரம்புக்கு அப்பால் உள்ள அப்பேர்பட்ட பொல்லாத செயல்களை செய்திருக்கக்கூடும். இப்பேர்பட்ட மக்கள் மனநிலையில் இயல்பாக இல்லாமலும் வார்த்தையை கேட்க முடியாமல் தாங்களாக மனந்திரும்ப முடியாமலு மிருந்தாலும், அவர்கள் தானே சபைக்கு வரவேண்டும் என்று இல்லை. ஆனால் அவர்கள் சார்பாக அவர்கள் குடும்ப அங்கத்தினர்கள் அன்போடு மனந்திரும்பி விசுவாசத்துடன் வல்லமையான ஜெபத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### 3. நோய்களிலிருந்து சுகத்தைப் பெறுவது எப்படி

#### 1) தேவனுக்கு விரோதமாயிருக்கிற பாவச்சுவர்களை தீவிரமாக உடைக்க வேண்டும்.

ஏசாயா 59:1–2ல் வாசிக்கிறோம், "இதோ இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது." இதன் அர்த்தம் தேவனுக்கும் உங்களுக்கும் நடுவாக பாவச்சுவர் இருக்கிற காரணத்தால் தேவனிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதாகும். ஆகவே, அவருடைய கிரியைகளை அனுபவிப்பதற்கு, முதலாவதாக நீங்கள் முற்றிலுமாய் உங்கள் பாவங்களை அறிக்கைச் செய்து, மனந்திரும்பி தேவனுக்கும் உங்களுக்கும் நடுவாக இருக்கிற பாவச்சுவரை அழிக்க வேண்டும்.

முதலாவது, நீங்கள் கிறிஸ்தவராய் இல்லாவிட்டால் நீங்கள் தேவனை விசுவாசித்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாததற்காக மனந்திரும்ப வேண்டும்.

தேவன் நம்மை சிருஷ்டித்து, நமக்காக அன்பினால் தம்முடைய ஒரேபேறான குமாரனை பரிகார பலியாக ஒப்புக்கொடுத்தார் (1யோவான் 4:10). அவருடைய அப்பேர்பட்ட அன்பை அறியாமல் விசுவாசியாமல் இருக்கிறதே பாவங்களிளெல்லாம் பெரிய பாவமா யிருக்கிறது.

ஆகவே, நீங்கள் முதலாவது தேவன் ஜீவிக்கிறார் என்றும் நாம் ஜெபிக்கும்போது அவர் நமக்கு பதிலளித்து நம்மை சுகமாக்குவார் என்றும் விசுவாசிக்க வேண்டும். நீங்கள் தேவனை விசுவாசியாமல் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததற்காகவும்கூட மனந்திரும்ப வேண்டும். நீங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு, நீங்கள் பரிசுத்த ஆவியை ஈவாக பெறுவீர்கள். அப்போது, ஆவியானவருடைய அக்கினி உங்கள் வியாதிகளைச் சுட்டெரித்து, உங்களை சுத்திகரிக்கும்.

இரண்டாவதாக, நீங்கள் ஏற்கெனவே கிறிஸ்தவர்களானால், உண்மையான விசுவாசம் கொண்டு இல்லாதிருந்ததை அறிக்கைச் செய்து மனந்திரும்ப வேண்டும்.

நீங்கள் விசுவாசித்துவிட்டீர்கள் என்று நீங்கள் சொல்லலாம், ஆனால் நீங்கள் உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் தேவனையும் ஆண்டவரையும் விசுவாசியாமல் இருந்ததை அறிக்கைச் செய்து மனந்திரும்ப வேண்டும். இப்பேர்பட்ட மக்கள் பிரச்சனைகளை சந்திக்கும்போது தேவனைவிட உலக முறைமைகளை சார்ந்துக்கொள்ளக் கூடியவர்களாயிருப்பீர்கள் (2 நாளாகமம் 1:6).

அவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனை விசுவாசித்தால், அவர்கள் தேவனை சார்ந்துக்கொள்வார்கள். உலக முறைமைகளைச் சார்ந்துக்கொள்ளுதல் என்பது தேவன் பேரிலுள்ள அவர்களது விசுவாசக் குறைச்சலை காட்டுகிறது. ஆகவே, நீங்கள் அவரைப் பரிபூரணமாக விசுவாசியாமல் இருந்ததை அறிக்கைச் செய்து மனந்திரும்ப வேண்டும். மேலும் நீங்கள் அவரைச் சார்ந்துக்கொண்டு உங்கள் விசுவாசத்தைக் காண்பிக்க வேண்டும். அப்போது உங்கள் ஜெபங்களுக்கு அவர் பதிலளிப்பார்.

மூன்றாவது, நீங்கள் தேவனுடைய கற்பனைகளை கைக் கொள்ளா–ததை அறிக்கைச் செய்து மனந்திரும்ப வேண்டும்.

1 யோவான் 5:3 சொல்கிறது, "நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்." மேலும் நீதிமொழிகள் 8:13ல் வாசிக்கிறோம், "தீமையை வெறுப்பதே கர்த்தருக்கு பயப்படும் பயம்." நீங்கள் தேவனை விசுவாசிக்கிறேன் அவரை நேசிக்கிறேன், அவருக்குப் பயப்படுகிறேன் என்று சொல்லியும் நீங்கள் பாவத்தில் இன்னமும் வாழ்ந்தால், நீங்கள் 1 யோவான் 2:4 சொல்கிறபடி, பொய்யராயிருக்கிறீர்கள். நீங்கள் தேவனிடத்தில் மன்னிக்கும்படி கேட்டாலும்கூட, நீங்கள் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளாத பட்சத்தில் நீங்கள் எந்தப் பதிலையும் பெற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் கற்பனைகளை கைக்கொள்ளவில்லை என்பதை அறிக்கைச் செய்து மனந்திரும்பி தேவனுக்காக உண்மையான அன்போடு வார்த்தையின்படி வாழத் துவங்கினால், நீங்கள் சுகத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நான்காவது, தேவனுக்கு முன்பாக விதைக்காமல் அறுக்க விரும்பியதை அறிக்கைச் செய்து மனந்திரும்ப வேண்டும்.

உங்களுக்கு சுகமும் பதில்களும் வேண்டுமானால் தேவனில் நீங்கள் விசுவாச விதைகளை நட வேண்டும் (கலாத்தியர் 6:7). நீங்கள் நேரம், உழைப்பு மற்றும் அர்ப்பணம் ஆகிய விதைகளை நட வேண்டும். ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்து, ஜெபித்து தேவனுடைய ராஜ்யத்திற்காக உண்மையாய் வேலைசெய்து, தசமபாகம் மற்றும் காணிக்கைகளைச் செலுத்த வேண்டும் (மத்தேயு 6:21). தேவன் உங்களுடைய செயல்களை மட்டுமே பார்ப்பவரல்ல, ஆனால் உங்கள் செயல்களிலுள்ள உங்களது இருதய தூபத்தை ஏற்கிறார். உங்களது விசுவாச, அர்ப்பண மற்றும் அன்பின் தூபம் தேவனைப் பிரியப்படுத்தும்போது, சுகமாகுதலின் கனி மற்றும் பதில்கள் விரைவாக வரும். நீங்கள் உங்களது விசுவாச விதைகளை அதிக மனப்பூர்வமாக நடும்போது உங்களது மனவிருப்பங்கள் நிறைவேறும்.

#### 2) ஆண்டவரில் ஆவிக்குரிய விசுவாசம் இருக்க வேண்டும்

இயேசுவானவர் ஜென்ம பாவம் உடையவராய் இருக்கவில்லை. அவருடைய வாழ்வில் எந்த ஒரு கரும பாவமும் அவர் செய்யவில்லை. ஆனால் அவர் சாட்டையினால் அடிக்கப்பட்ட தம்முடைய விலையேறப் பெற்ற இரத்தத்தை அவர் சிந்தினார். இது நம்மை எல்லா வகையான பாவங்களிலிருந்து மீட்பதற்காக ஆயிற்று. ஏசாயா 53:5 சொல்கிறது, அவருடைய தழும்புகளால் சுகமாகிறோம் என்று. நீங்கள் இதை விசுவாசித்தால், நீங்கள் ஏற்கெனவே சுகமாகிவிட்டீர்கள் என்பதை அறிக்கைச் செய்து, களிகூர்ந்து நன்றி செலுத்த வேண்டும். அப்போது உங்களுக்கு தேவபதிலைப் பெற தகுதியான ஆவிக்குரிய விசுவாசம் கொடுக்கப்படும். ஆனால் பதிலை பெறும் நேரம் நபருக்கு நபர் வித்தியாசப்படும்.

தேவன் ஒவ்வொரு நபருடைய இருதயம் மற்றும் சூழ்நிலையை சார்ந்து வித்தியாசமாக கிரியை செய்கிறார். நீங்கள் சுகத்தைப் பெற்ற பின்னரும் மாறாமல் ஊக்கமான விசுவாச வாழ்வு வாழக்கூடியவர்களாயிருப்பீர்களானால், தேவன் உங்கள் விசுவாசம் பதில் பெற போதுமானதாக இல்லையென்றாலும் உங்களை குண மாக்கலாம். ஆனால் சில மக்கள் அவர்கள் விசுவாசம் வளர வளர கொஞ்சம் கொஞ்சமாக சுகமாக்கப்படுவார்கள். இப்படி தெய்வீக சுகத்தில் வித்தியாசம் இருப்பதற்கான அடிப்படை நோக்கமே ஒவ் வொருவரின் இரட்சிப்புதான்.

கூடவே, நீங்கள் குணமாக்கப்பட்டாலும்கூட, நீங்கள் மீண்டும் பாவஞ்செய்தால், மிக மோசமானது ஏதாகிலும் உங்களுக்கு நடந்துவிடும் (யோவான் 5:14). மிக முக்கியமானது என்னவென்றால், நீங்கள் குணமான பின் தேவனுடைய வார்த்தையின்படி மாறாமல் வாழ வேண்டும் என்பதே. இப்பேர்பட்ட உண்மையுள்ள இருதயத்தோடு நீங்கள் கேட்கும்போது, தேவன் விரைவாக உங்களுக்குப் பதிலளிப்பார்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, சுகத்தையும் ஆசீர்வாதங்களையும், பதில்களையும் பெற்றுக்கொள்வதை விட மிக மிக முக்கியமானது ஒன்று இருக்கிறது. தேவன் சகல தேசத்தின் சகல மக்களும் இரட்சிக்கப்பட்டு பரலோகம் அடைய வேண்டும் என்று விரும்புகிறார். நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பாவ மன்னிப்பைப் பெற்று தேவன் விரும்புகிற ஆவிக்குரிய விசுவாசத்தைப் பெற வேண்டும் என உங்களை ஊக்கப்படுத்துகிறேன். இப்படிச் செய்வதால் நீங்கள் எப்பேர்பட்ட வேண்டுதலுக்கும், ஜெபத்திற்கும் அல்லது விண்ணப்பத்திற்கும் பதிலைப் பெற்று பரிபூரண இரட்சிப்பை அடைய வேண்டும் என்று ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

## "தேவனுடைய வல்லமையால் வேதாகம சுகமளிக்கும் ஊழியம் என் இருதயத்தை அசைத்தது!"







**மருத்துவர். ஒலேக் ஒஸ்டேரிக்கோ, நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணவர், ரஷ்யா**

"நான் மருத்துவர் அன்ரே கஷிவ்ரோஸ்கி அவர்களது அறிவர். ஜேராக் லீ அவர்களது வாழ்வு மற்றும் விசுவாசத்தைக் குறித்து சிறப்பு உரையை கேட்டு மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டேன். அறிவர். லீ அவர்கள் மரணத்தின் வாசலில் இருக்கும்போது தேவனை சந்தித்து தேவனுடைய பல கிரியைகளை அடைந்துள்ளார். அவருடைய வாழ்வு விசேஷமானது, தேவனை உண்மையாய் நேசித்து அவருடைய வார்த்தையின்படி வாழ்கிறவர்களுக்கு எந்தளவான ஆசீர்வாதங்கள் கொடுக்கப்படும் என்பதை காண்பித்துள்ளார். உண்மையான விசுவாசத்தின் நல் உதாரணத்தை ஏற்படுத்திய அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு என் நன்றியை செலுத்துகிறேன்."

**மருத்துவர். வெளேரி, உக்ரைன்**

"தேவனுடைய சுகமாகுதலின் கிரியைகளை சுகமான சாட்சிகள் அறிமுகங்களின் மூலமாக கண்டு அநேக காரியங்களை நான் கற்றுக்கொண்டேன். கஷ்டங்களின் மத்தியில் தேவனுடைய வல்லமையை நாம் சார்ந்துக்கொண்டால் எப்பேர்பட்ட ஆசீர்வாதங்கள் நம் மீது வரும் என்பதை என்னால் பார்க்க முடிந்தது. மருத்துவர். டேவிட் யூ அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட மூவான் மதுர தண்ணீர் சாட்சி எனக்கு மிகவும் பிடித்தது. கடலிலிருந்த உப்புத் தண்ணீர் குடிக்கக்கூடிய மதுரமான தண்ணீராய் மாறியதும், அதன்மூலமாய் வெளிப்பட்ட வல்லமையான கிரியைகளும் ஆச்சரியமாயிருந்தது. இது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்ததன் காரணம் வேதாகமத்தில் எழுதப்பட்ட நிகழ்விற்கு ஒத்தாற்போலவே இது இருந்தது."






# “தேவன் ஜீவிக்கிறார், அவரே நம்மை குணமாக்குபவர்!”

15வது WCDN சர்வதேச கிறிஸ்தவ மருத்துவர்கள் கருத்தரங்கில், அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தினால் நடைபெற்ற சுகமளிக்கும் கிரியைகளை பகிர்ந்து, இன்றும் கிரியை செய்கிற ஜீவனுள்ள தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



சுகமான சாட்சியின் காட்சியளிப்பு 1

## மூளை இரத்தக்கசிவு

Dr. லியுப்கா தன்ஷிவா, WCDN பல்கேரியாவின் இயக்குனர்




**கொரியாவைச் சார்ந்த மூத்த கண்காணியை யங்ஷிம் லீ, வயது 56,** 15 நாட்களுக்கு தீராத தலைவலி இருந்தது. ஒரு நிமிடத்திற்கு உடல் நடுக்கம் ஏற்பட்ட பிறகு, அவளுடைய கண்கள் குறுக்காக போய், சரீரத்தின் இடது பக்கம் பக்கவாதமடைந்துவிட்டது. அவள் சுயநினைவை இழந்தாள். அவளுக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேனில் அவளுடைய மூளையின் இடது பக்கத்தில் உள்ள முன்புற மடலில் இரத்தக்கசிவு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அடுத்த நாளில், எடுக்கப்பட்ட எம்ஆர்ஐ ஸ்கேனில் அவளுடைய மூளையின் வலது பக்கத்திலும், இடது முன்புற மடலிலும் ஏற்பட்ட இரத்தக்கசிவு கண்டறியப்பட்டது.

2005ம் ஆண்டு ஏப்ரலில், அவளுக்கு மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்ட மூன்றாவது நாள் அது. அந்த நாளில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவமனையில் இருந்த அவளுக்குப் பதிலாக அவளுடைய குடும்பத்தினர் குடும்பமாய் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டபொழுது, அதே நாளில் அவள் சுயநினைவிற்கு வந்தாள். இரண்டாவது முறையாக அவளுக்காக ஜெபித்தபோது, அவளுடைய பக்கவாதத்திலிருந்து விடுதலைப் பெற்றாள். அவருடைய மூன்றாவது ஜெபத்திற்குப் பிறகு, அவள் நடக்கவும் பொருட்களை எடுக்கவும் பெலனைப் பெற்றுக்கொண்டாள்.

மே 4 அன்று, இரண்டு வாரங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்ட எம்.ஆர்.ஐ ஸ்கேனில் அவளுடைய இரத்தக்கட்டியின் அளவு குறைந்திருப்பது தெரிந்தது; மூளையிலிருந்த நீர்க்கட்டும் குறைந்தது. இந்தப் பிரச்சனை ஏற்பட்டதிலிருந்து ஒன்பது மாதங்களுக்குப் பிறகு சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அது இரத்தக் கட்டியானது மூளையில் எவ்வித கட்டியும் இல்லாதபடிக்கு அமிழ்வுற்றோ அல்லது கரைந்தோ போய்விட்டது. அவள் பரிபூரணமாக சுகமடைந்தாள்.

**எம்.ஆர்.ஐ முடிவுகள்**



▲ மூளை இரத்தக்கசிவு அவளுடைய மூளையின் இரண்டு பக்கங்களிலும் பெரிய அளவில் இருப்பது கண்டறியப்பட்டது. ஆனால், ஜெபத்திற்கு பின் இரத்தக்கசிவு மறைந்துவிட்டது

**Dr. லிடியா கொலேஸ்வா, எஸ்டோனியா, கதிர்வீச்சு மருத்துவர்**

“நான் மூளை இரத்தக் கசிவிலிருந்து சுகமடைந்த அந்தப் பெண்மணியின் சாட்சியினால் அதிகமாய் தொடப்பட்டேன். தேவனுடைய வல்லமையை கண்டேன்! அவள் மூளை இரத்தக்கசிவின் நிமித்தம் மருத்துவமனைக்கு அவசரமாய் கொண்டு செல்லப்பட்டாள். ஆனால் ஜெபத்திற்கு பிறகு சில நாட்களில் அனைத்து அறிகுறிகளும் மறைந்துப்போனது. ஜெபத்தினால் நிகழும் தேவனுடைய கிரியைகளின் மூலம் விளக்கமுடியுமே தவிர வேறொன்றின் மூலமும் இந்த அற்புதத்தை விளக்க முடியாது.

மூளை இரத்தக்கசிவு என்பது மிகவும் ஆபத்தானதொரு சூழ்நிலை. தகுந்த சிகிச்சை இல்லாமல் அது சரீரத்தின் பகுதிகளை பக்கவாதமாக்கி, ஆரோக்கியத்தையும் கடுமையாக குலைத்துவிடும். தகுந்த அறுவைச் சிகிச்சையினால் மறுபடியும் இயல்பாக வாய்ப்பிருந்தாலும், அவள் ஜெபத்தினாலும் தேவனுடைய வல்லமையினாலும் மாத்திரமே சுகமடைந்தாள். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!”



சுகமான சாட்சியின் காட்சியளிப்பு 2

## இருதய செயலிழப்பு


Dr. வாகி புனியாடியன், WCDN அர்மேனியாவின் இயக்குனர்



**சகோதரி டாடியானா டபரனு, வயது 57, மல்டோவாவில்** வசிக்கும் சகோதரியின் இருதயம் செயலிழந்துபோனது; இரைப்பை வீங்கி பெரிதானது; நுரையீரலில் உயரிய இரத்த அழுத்தம் ஏற்பட்டதால் இரத்த ஓட்டத்தில் தடைகள் ஏற்பட்டது. அவளுடைய இரண்டு கால்களும், முகமும் வீங்கியது, அடிவயிறும் வீங்கிக்கொண்டே போனது. அவளுக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது. மருத்துவர் அவளுடைய இருதயத்தில் ஏற்பட்ட கோளாறு தான் இந்த வியாதிக்கு காரணம் என்று சொன்னார். சரியான சிகிச்சை அளிக்காவிட்டால் இரண்டு வாரத்தில் மரித்துவிடுவாள் என்று சொல்லிவிட்டார்.

அவளுடைய முதல் மகன் அறிவர். ஜேராக் லீ அவர்களிடம் ஜெப விண்ணப்பத்தை அனுப்பினார். டிசம்பர் 24, 2014 அன்று அறிவர். லீ சபை ஆராதனையின் ஜெப வேளையில் அவளுடைய பெயரை சொல்லி, அவளுக்காக ஜெபித்தார். அவள் பதிவு செய்யப்பட்ட ஆராதனையில் பங்குப்பெற்று அவருடைய ஜெபத்தைப் பெற்றாள். அதன்பிறகு, அவளுடைய இருதயத்தில் அடைத்திருந்த ஏதோ ஒன்று மறைந்துப்போனதை போல உணர்ந்தாள். அவள் இருதயம் நன்றாய் இயங்குவதை உணர்ந்து, இயல்பாக சுவாசிக்க ஆரம்பித்தாள். அடுத்த நாளில்தானே அவளுடைய உடல் முழுவதும் இருந்த வீக்கம் குறைந்துபோனது, அவள் சீக்கிரமே நல்ல முன்னேற்றமடைந்தாள். ஜனவரி 1, 2015 அன்று, அவள் பூரணமாய் இயல்புநிலையை அடைந்தாள். நீண்ட காலத்திற்கு பிறகு, அவள் நன்றாக நடக்கிறாள், அசைகிறாள், குதிக்கவும் செய்கிறாள்.

**ஜெபத்திற்கு முன்பும் பின்பும்**



▲ உயரிய இரத்த அழுத்தம் காரணமாக அவளுடைய சரீரம் முழுவதும் வீங்கியது. ஒரு கொடிதான இருதய கோளாறின் நிமித்தம் அவள் சுவாசிப்பதில் கஷ்டப்பட்டாள். ஆனால் காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட ஜெபத்தைப் பெற்ற பிறகு, அவளுடைய சரீரம் முழுவதும் இருந்த வீக்கம் குறைந்து இயல்பு நிலையை அடைந்தாள்.

**Dr. போரிஸ் டொபோர், மல்டோவா, டொபோகிராபிக் அனாடமிஸ்ட்**

“தெய்வீக சுகத்தை உறுதிப்படுத்துகிற ஒரு சாட்சி இது. அவள் எந்தவித மருத்துவ சிகிச்சையும் இன்றி ஜெபத்தினால் மட்டுமே சுகத்தைப் பெற்றுக்கொண்டாள். உயரிய இரத்த அழுத்தத்தால் விளைந்த இரத்த ஓட்ட தடையினால் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டது. அவள் மரித்துக் கொண்டிருந்தாள், ஆனால் ஜெபத்தினால் சுகமடைந்தாள்! உயிரியல் செயல்முறையின்படி பார்த்தால் அவளுடைய வீக்கம் குறைவதென்பது மிகவும் சிக்கலான ஒன்றாகவே இருந்தது. ஆனால் அவளுடைய முழு சரீரத்திலிருந்த வீக்கமும் குறைந்துபோனது. அது ஆச்சரியமானது!

எல்லாவற்றிற்கும் மேலாக, அறிவர். ஜேராக் லீ தென் கொரியாவிலிருந்து அவளுக்காக ஜெபித்தார். அவள் ஐரோப்பாவில் உள்ள மல்டோவாவிலிருந்து ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாள். காலம் இடத்தைத் தாண்டி நடைபெற்ற இந்த சுகம் உண்மையிலே தேவனுடைய கிரியைதான்!”



சுகமான சாட்சியின் காட்சியளிப்பு 3


## பித்தப்பை நோய்

Dr. டானியேல் பியுன்டிஸ், WCDN மெக்ஸிகோவின் இயக்குனர்



**சகோதரி மரியா மக்வாடோ, வயது 24, பெருவில்** வசிக்கும் இவளுக்கு செப்டம்பர் 2014ல் திடீரென்று வயிற்றுவலி ஏற்பட்டது. அவளுடைய அல்ட்ராசவுண்ட் பரிசோ–தனையில் 16.5 மி.மீ அளவிலான கல் அவளுடைய பித்தப்பையில் இருப்பது தெரிய வந்தது. அவள் விசுவாசத்தினால் சுகத்தைப் பெற விரும்பினாள்; அவள் தன் கடந்தகால தவறுகளை ஆராய்ந்து பார்த்தாள். இதற்கிடையில், அறிவர். ஜேராக் லீ அவளுடைய கனவில் தோன்றி, அவளுக்காக ஜெபித்திருக்கிறார். இதன்மூலம் சுகம் கிடைத்துவிட்டது என்ற உறுதி அவளுக்குள் ஏற்பட்டதால், மறுபடியும் பித்தப்பைக்கான பரிசோதனையை செய்தாள். அந்தப் பரிசோதனையில் 16.5 மி.மீ கல் மறைந்துப்போனது உறுதிசெய்யப்பட்டது. பித்த நாளமே 5 மி.மீ தான் இருக்கும். எனவே பித்தநாளத்தை விட பெரியதான பித்தப்பை கல் அந்த நாளத்தின் வழியாக வெளியேறி இருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் பெரிய கல் மறைந்துப்போனது!

**அல்ட்ராசவுண்ட் பரிசோதனை முடிவுகள்**




▲ ஜெபத்திற்கு முன்: அவளுடைய பித்தப்பையில் உள்ள 16.5 மி.மீ அளவுடைய பித்த கல்

▶ ஜெபத்திற்கு பின்: Dr. லீ அவர்களின் ஜெபத்தை கனவில் பெற்ற பிறகு கல் மறைந்து போனது



**கண்காணி முன்செங் கிம், வயது 59 கொரியாவில்** வசித்து வரும் இவருக்கு ஜூன் 2017ல் திடீரென்று கடுமையான வயிற்றுவலி உண்டானது. மருத்துவ பரிசோதனையில் அவருடைய பித்தப்பையில் அழற்சி ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. சிடி ஸ்கேனில் அவருடைய பித்தப்பையில் கடுமையான அழற்சியால், சில பகுதிகள் அழிந்து, சீழ் பரவி கொண்டிருந்தது காண்பிக்கப்பட்டது. ஆனால் அவர் விசுவாசத்தோடு அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்ற பிறகு, அழிந்துகொண்டு, சீழ் பரவி கொண்டிருந்த அவருடைய பித்தப்பை இயல்பு நிலைக்கு திரும்பியது. அவர் எந்த ஒரு கிருமியொடுக்கி மருந்தையோ அல்லது வலி நிவாரணியையோ எடுத்துக்கொள்ளவில்லை.

**சிடி ஸ்கேன்**



▲ ஜெபத்திற்கு முன்: அவருடைய பித்தப்பை அழுகி, அழிந்து சீழ் பரவி கொண்டிருந்தது.

▶ ஜெபத்திற்கு பின்: அவருடைய பித்தப்பை ஜெபத்திற்கு பிறகு நன்றாக மாறி இருக்கிறது.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com